THE HINDU 30 JAN 2025


# Insertion of names, party symbols, fixing of ballot sheets on EVMs begins

The process began in the presence of Returning Officer and Corporation Commissioner H.S. Srikanth and is expected to be completed by Thursday; a total of 46 candidates are in the fray

**The Hindu Bureau**
ERODE

The insertion of names, photos and symbols of candidates onto the ballot units for the byelection to the Erode (East) Assembly constituency, scheduled for February 5, began at the Corporation Central Office here on Wednesday.

The process began in the presence of Returning Officer and Corporation Commissioner H.S. Srikanth and is expected to be completed by Thursday. A total of 46 candidates are in the fray. The None of The Above (NOTA) symbol is printed as the 47th option on the ballot paper and appears on the third ballot unit.



Insertion of name and photos of candidates on ballot units for the byelection to Erode (East) Assembly constituency began in Erode on Wednesday. M. GOVARTHAN

Each ballot paper has the provision for 16 candidates and three ballot units will be used at each polling station. A total of 852 ballot units (including a 20% reserve), 285 control units (20% reserve) and 308 voter verifiable paper audit trails (30% reserve) will be used in 237 polling stations.

A total of 20 zonal teams, each comprising five staff members, were involved in the process. All machines kept in the strong room were taken out in the presence of candidates agents.

Batteries were checked, ballot papers fixed onto the ballot units and they were sealed.

Similarly, in the voter verifiable paper audit trails (VVPATs), a new paper roll was placed in the compartment, and the serial number, name and symbol of the candidates were loaded before the compartment was sealed. At the end of the process, all the machines will be returned to the strong room and sealed.

Scanned with OKEN Scanner

THE HINDU 30 JAN 2025

# Seeman booked for campaigning beyond permitted time

The Hindu Bureau
ERODE

The Karungalpalayam police on Wednesday registered a case against Naam Tamilar Katchi (NTK) chief coordinator Seeman and five others for campaigning beyond permitted time in the Erode (East) Assembly constituency on Tuesday night. The police said that Mr. Seeman participated in a public meeting to campaign for his party's candidate in the byelection, M.K. Seethalakshmi, at Nerikalmedu.

**Complaint**

Permission was granted for the meeting from 5.30 p.m. to 6 p.m., but the meeting ended at 9.15 p.m. Based on a complaint from the flying squad, the police registered a case.

**Violation**

So far, five cases have been filed against Mr. Seeman for violating the model code of conduct, which is in force for the byelection scheduled on February 5 here.

Scanned with OKEN Scanner

DECCAN CHRONICLE

30 JAN 2025






Insertion of party symbols, names and photos of candidates on ballot units that will be used in polling stations for the byelections to Erode East Assembly constituency, scheduled for February 5, begins on Tuesday, amid tight security.

—Zakeer Hussain

Scanned with OKEN Scanner

THE NEW INDIAN EXPRESS 30 JAN 2025

# Symbols affixed on EVMs ahead of bypoll

EXPRESS NEWS SERVICE @Erode

THE process of affixing names, photos, and symbols of the candidates contesting in the Erode East by-election on the EVMs began on Wednesday in the presence of Returning Officer and Corporation Commissioner HS Srikanth.

A total of 46 candidates are in the fray. The None of The Above (NOTA) symbol is printed as the 47th option and is pasted on the third ballot unit. Each ballot unit has provision for 16 candidates and three ballot units will be used in each polling station. A total of 237 polling stations have been set up and 852 ballot units, 285 control units, and 308 VVPAT machines will be used for voting which would take place on February 5. The result will be declared on February 8.



Election officials affixing symbols of candidates on EVMs | EXPRESS

Scanned with OKEN Scanner

இந்து தமிழ் 30 JAN 2025

ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல்

# வாக்குப்பதிவு இயந்திரங்களில் சின்னம் பொருத்தும் பணி தொடக்கம்

■ ஈரோடு

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் பயன்படுத்தப்படும் வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர் பெயர், சின்னம் பொருத்தும் பணி தொடங்கியது

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் பிப்ரவரி 5-ம் தேதி நடக்கவுள்ளது. இதில், திமுக, நாம் தமிழர் கட்சி உள்ளிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் மற்றும் சுயேச்சை வேட்பாளர்கள் என மொத்தம் 46 பேர் போட்டியிடுகின்றனர். கடந்த 20-ம் தேதி வேட்பாளர்களுக்கு சின்னம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, வாக்குப் பதிவு இயந்திரங்களில் பொருத்துவதற்காக வேட்பாளர்கள் பெயர், சின்னம் ஆகியவை அச்சிடப்பட்ட ‘பேலட் ஷீட்’களை அச்சிடும் பணி சென்னையில் நடந்தது. இப்பணி நிறைவடைந்த நிலையில், வாக்குப்பதிவு இயந்திரங்களில், வேட்பாளர் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணி, ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் நேற்று காலை தொடங்கியது. இப்பணியைப் பார்வையிட வேட்பாளர்கள், முகவர்கள் சோதனைக்குப் பின் அனுமதிக்கப்பட்டனர்.

மாநகராட்சி பாதுகாப்பு அறையில் இருந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் தேர்தல் நடத்தும் அலுவலர் ஸ்ரீகாந்த் முன்னிலையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர் முன்னிலையில் திறக்கப்பட்டு மாநகராட்சி கூட்டரங்குக்கு கொண்டு செல்லப்பட்டது.

தொடர்ந்து வாக்குப்பதிவு இயந்திரங்களில், வேட்பாளர் பெயர், சின்னம் பொருத்திய ‘பேலட் ஷீட்’ பொருத்தும் பணியில் அலுவலர்கள் ஈடுபட்டனர்.

ஒரு வாக்குப்பதிவு இயந்திரத்தில் 16 வேட்பாளர்களின் பெயர்கள் மட்டுமே பொருத்த முடியும் என்ற நிலையில், 46 வேட்பாளர்கள் மற்றும் நோட்டா என மொத்தம் 47 பேர் களத்தில் உள்ளதால், ஒரு வாக்குச்சாவடிக்கு 3 வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படவுள்ளன.

அதன்படி, இந்தத் தேர்தலில் 237 வாக்குச் சாவடிகளிலும், 20 சதவீதம் கூடுதல் வாக்குப் பதிவு இயந்திரங்களையும் சேர்த்து மொத்தம் 852 வாக்குப்பதிவு இயந்திரங்கள், 284 கட்டுப்பாட்டு இயந்திரங்கள், 308 விவி பேட் இயந்திரங்கள் பயன்படுத்தப்படவுள்ளன.

இதில், 852 வாக்குப் பதிவு இயந்திரங்களிலும் வேட்பாளரின் பெயர், சின்னம் அச்சிடப்பட்டுள்ள ‘பேலட் ஷீட்’கள் பொருத்தும் பணி தொடங்கியுள்ளது. இப்பணி 3 நாட்களுக்குள் நிறைவடையும், என தேர்தல் அலுவலர்கள் தெரிவித்தனர்.

Erode East Assembly Constituency By-election.
Fixing of symbols in EVMs started.

Scanned with OKEN Scanner

**இந்து தமிழ்** 30 JAN 2025

# தேர்தல் விதிகளை மீறியதாக சீமான் உட்பட 10 பேர் மீது வழக்கு பதிவு

■ ஈரோடு

ஈரோட்டில் தேர்தல் விதிகளை மீறியதாக நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் உட்பட 10 பேர் மீது போலீஸார் வழக்குப்பதிவு செய்தனர்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர் சீதாலட்சுமியை ஆதரித்து, அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் ஈரோட்டில் தொடர் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார். இதில் தேர்தல் விதிகளை மீறியும், அனுமதி பெறாமலும் பிரசாரம் செய்ததாக ஏற்கெனவே வேட்பாளர் சீதாலட்சுமி மற்றும் சீமான்உள்ளிட்ட கட்சிநிர்வாகிகள் மீது 10-க்கும் மேற்பட்ட வழக்குகளை போலீஸார் பதிவு செய்துள்ளனர்.

இந்நிலையில், ஈரோடு நெரிக்கல்மேட்டில் நேற்று முன் தினம் மாலை வேட்பாளர் சீதாலட்சுமியை ஆதரித்து மாலை 5.30 மணி முதல் 6.30 மணி வரை பொதுக்கூட்டம் நடத்த நாதக-வினர் அனுமதி பெற்றிருந்தனர். ஆனால், அனுமதிக்கப்பட்ட நேரத்தை தவிர்த்து மாலை 6.15 மணிக்கு பொதுக்கூட்டத்தை தொடங்கி இரவு 9.15 மணி வரை நடத்தினர்.

இதுகுறித்து தேர்தல் பறக்கும்படை அதிகாரி நவீன் ஈரோடு கருங்கல்பாளையம் காவல் நிலையத்தில் அளித்த புகாரின்பேரில் தேர்தல் விதிகளை மீறியதாக, சீமான் உள்ளிட்ட 10 பேர் மீது போலீஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

Case filed on 10 persons including Seeman for violation of ECC.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 30 JAN 2025

# வாக்குப்பதிவு எந்திரங்களில் சின்னம் பொருத்தும் பணி



ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் வேட்பாளர்கள் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணி நேற்று நடந்தபோது எடுத்த படம்.

Erode East Assembly Constituency By-election.
Fixing of symbols in EVMs started.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 30 JAN 2025

ஈரோடு இடைத்தேர்தலில் முறைகேடுகளை தடுக்க

# வெளியூர்காரர்களுக்கு இ-பாஸ் முறையை அமல்படுத்தக்கோரி வழக்கு

## தேர்தல் ஆணையம் பதில் அளிக்க ஐகோர்ட்டு உத்தரவு

சென்னை, ஜன.30-

ஈரோடு கிழக்கு சட்டசபைத் தொகுதி இடைத்தேர்தலில் நடைபெறும் முறைகேடுகளை தடுக்கவும், வெளியூர்காரர்களுக்கு இ-பாஸ் வழங்கும் முறையை அமல்படுத்தவும் கோரி தொடரப்பட்ட வழக்கிற்கு தேர்தல் ஆணையம் பதில் அளிக்க வேண்டும் என்று சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டு உள்ளது.

### கொட்டகை அமைப்பு

ஈரோடு கிழக்கு சட்டசபைத் தொகுதி எம்.எல்.ஏ.வாக இருந்த ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் மறைந்ததையடுத்து, அந்த தொகுதிக்கு வருகிற பிப்ரவரி 5-ந்தேதி இடைத்தேர்தல் நடைபெற உள்ளது.

இந்த நிலையில், இந்த தொகுதிக்குள் வெளியூர் நபர்கள் வருவது என்றால் இ-பாஸ் பெறவேண்டும் என்று உத்தரவிடக்கோரி சென்னை ஐகோர்ட்டில் கொங்கு தேச மறுமலர்ச்சி மக்கள் கட்சியைச் சேர்ந்த ராஜா என்பவர் வழக்கு தொடர்ந்து உள்ளார். அதில் கூறியிருப்பதாவது:-

ஈரோடு கிழக்கு முந்தைய இடைத்தேர்தலில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட ஈ.வி.கே.எஸ்.இளங்கோவனை வெற்றிபெற செய்வதற்காக ஆளும் கட்சியினர் கடுமையாக உழைத்தனர்.

அந்தவகையில், ஒவ்வொரு வார்டிலும், கொட்டகைகள் அமைத்து, அதில் வாக்காளர்கள் தங்கவைக்கப்பட்டனர். அவர்களுக்கு 3 வேளையும் சாப்பாடு, பணம் உள்ளிட்டவை வழங்கப்பட்டது. இதனால், பிற கட்சி வேட்பாளர்கள், வாக்காளர்களை எளிதாக அணுக முடியவில்லை.

### இ-பாஸ் வழங்க....

தற்போது நடைபெறும் இடைத்தேர்தலிலும், கொட்டகை அமைக்கப்பட்டு, முன்பை போலவே வாக்காளர்கள் தங்கவைக்கப்படுகின்றனர். அவர்களுக்கு சாப்பாடு உள்ளிட்ட அனைத்தும் வழங்கப்படுகிறது.

இதை தடுக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும். மேலும், ஈரோடு கிழக்கு தொகுதிக்குள் வரும் வெளியூர் நபர்களுக்கும், வெளியூர் செல்லும் தொகுதி வாக்காளர்களுக்கும் இ-பாஸ் நடைமுறையை அமல்படுத்தவும், தேர்தல் முறைகேடுகள் குறித்து புகார் அளிக்க ஆன்லைன் வசதிகளை செய்து கொடுக்கவும், தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு அதில் கூறியிருந்தார்.

### இலவசம்

இந்த வழக்கை நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், சி.குமரப்பன் ஆகியோர் விசாரித்தனர். அப்போது நீதிபதிகள், வாக்காளர்களைக் கவர கொட்டகை அமைக்கிறார்கள் என்றால், அந்த கொட்டகைக்கு வாக்காளர்கள் எதற்காக செல்லவேண்டும்? வாக்காளர்களுக்கு யார் தான் இலவசங்களை வழங்கவில்லை? என்று கேள்வி எழுப்பினர். பின்னர் இந்த வழக்கில் தேர்தல் ஆணையம் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை தள்ளிவைத்துள்ளனர்.


To prevent irregularity in Erode by-election, case filed for implementation of e-pass system for non-native people. HC orders Election Commission to reply.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி

30 JAN 2025

## தீவிர வாகன சோதனை




ஈரோடு கிழக்கு தொகுதியில் வருகிற 5-ந் தேதி இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. இதையொட்டி தேர்தல் பறக்கும் படையினர் வாக்காளர்களுக்கு பணம், பரிசு பொருட்கள் கொடுப்பதை தடுக்க தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். ஈரோடு கருங்கல்பாளையத்தில் நேற்று தேர்தல் பறக்கும் படையினர் ஒரு காரில் தீவிர சோதனை நடத்திபோது எடுத்த படம்.

### தேர்தல் பறக்கும் படையினர் வாகன சோதனை:

# ஜவுளி வியாபாரியிடம் ரூ.1½ லட்சம் பறிமுதல்

ஈரோடு, ஜன.30-

தேர்தல் பறக்கும் படையினர் வாகன சோதனையின்போது ஜவுளி வியாபாரியிடம் ரூ.1½ லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது.

### தீவிர வாகன சோதனை

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வருகிற 5-ந்தேதி நடக்கிறது. இதை முன்னிட்டு கடந்த 7-ந்தேதி முதல் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளது. இதனால் வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசு பொருட்கள் கொடுப்பதை தடுக்கும் வகையில், 3 பறக்கும் படை மற்றும் 3 நிலை கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழுவினர் கிழக்கு தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு, அப்போது ரூ.50 ஆயிரத்துக்கு மேல் பணம் மற்றும் பரிசு பொருட்கள் கொண்டு வந்தால் அவற்றை பறிமுதல் செய்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

### ரூ.1½ லட்சம் பறிமுதல்

இந்த நிலையில் நேற்று தேர்தல் பறக்கும் படையினர் ஈரோடு பி.பி.அக்ரஹார்ரம் பகுதியில் வாகன தணிக்கையில் ஈடுபட்டனர். அப்போது அந்த வழியாக வந்த காரை தடுத்து நிறுத்தி சோதனை செய்தனர். காரில் ரூ.1 லட்சத்து 50 ஆயிரம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் காரை ஓட்டி வந்தவரிடம் அதிகாரிகள் விசாரணை நடத்தினர். விசாரணையில் அவர், கோவை மாவட்டம் துடியலூர் அருகே உள்ள எஸ்.எம்.பாளையம் பகுதியை சேர்ந்த ஜவுளி வியாபாரி கவுதமன் என்பதும், அவர் எடுத்து வந்த பணத்துக்கு உரிய ஆவணம் இல்லை என்பதும் தெரியவந்த்து. இதைத் தொடர்ந்து தேர்தல் அதிகாரிகள் அந்த பணத்தை பறிமுதல் செய்தனர்.

இதேபோல் ஈரோடு அரசு ஆஸ்பத்திரி ரவுண்டானா பகுதியில் தேர்தல் பறக்கும் படை அதிகாரி தினகரன் தலைமையிலான அதிகாரிகள் வாகன தணிக்கை நடத்தினர்.

அப்போது அந்த வழியாக வந்த காரை தடுத்து நிறுத்தி சோதனை செய்தபோது, உரிய ஆவணம் இல்லாமல் ரூ.1 லட்சத்து 88 ஆயிரம் இருந்தது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து காரை ஓட்டி வந்த பாண்டி என்பவரிடம் இருந்து ரூ.1 லட்சத்து 88 ஆயிரத்தை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

ஈரோடு கிழக்கு தொகுதியில் இதுவரை உரிய ஆவணங்களின்றி எடுத்து வரப்பட்ட ரூ.40 லட்சத்து 62 ஆயிரத்து 560-ஐ தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

Flying squad seized the amount of Rs.1.5 Lakhs from a textile trader.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி

30 JAN 2025

# மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் வேட்பாளர்கள் பெயர், சின்னம் பொருத்தும் பணி

ஈரோடு, ஜன.30-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் வேட்பாளர்கள் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணி நேற்று தொடங்கியது.

## இடைத்தேர்தல்

ஈரோடு கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ.வாக இருந்த ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் கடந்த மாதம் 14-ந்தேதி உடல் நலக்குறைவால் காலமானார். இதைத்தொடர்ந்து இந்த தொகுதிக்கான இடைத்தேர்தல் வருகிற 5-ந் தேதி நடைபெறும் என்று இந்திய தேர்தல் ஆணையத்தால் கடந்த 7-ந்தேதி அறிவிக்கப்பட்டது.

கடந்த 10-ந்தேதி முதல் 17-ந்தேதி வரை வேட்பு மனு தாக்கல் நடந்தது. 18-ந்தேதி வேட்பு மனு பரிசீலனை செய்யப்பட்டது. 20-ந்தேதி வேட்பு மனு வாபஸ் பெற கடைசி நாளாகும். பின்னர் இறுதி வேட்பாளர் பட்டியல் சின்னத்துடன் வெளியிடப்பட்டது. அதன்படி ஈரோடு கிழக்கு தொகுதியில் தி.மு.க., நாம் தமிழர் கட்சி மற்றும் சுயேச்சைகள் உள்பட 46 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

## வாக்குப்பதிவு எந்திரங்கள்

ஈரோடு கிழக்கு தொகுதியில் மொத்தம் 2 லட்சத்துக்கு 27 ஆயிரத்து 546 வாக்காளர்கள் உள்ளனர். இவர்கள் வாக்களிப்பதற்கு வசதியாக மொத்தம் 237 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. 46 வேட்பாளர்கள் களத்தில் உள்ளதால் ஒவ்வொரு வாக்குச்சாவடி மையங்களிலும் தலா 3 வாக்குப்பதிவு எந்திரங்கள் பயன்படுத்தப்பட உள்ளன.

அதன்படி ஈரோடு கிழக்கு தொகுதியில் மொத்தம் 852 வாக்குப்பதிவு எந்திரங்கள், 284 கட்டுப்பாட்டு எந்திரங்கள் மற்றும் 308 வி.வி.பேடு எந்திரங்கள் பயன்படுத்தப்பட உள்ளன. இந்த எந்திரங்கள் சரி பார்க்கும் பணி முடிவடைந்து, இந்திய தேர்தல் ஆணையத்தின் கணினி சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதைத்தொடர்ந்து ஈரோடு ஆர்.டி.ஓ. அலுவலக வளாகத்தில் உள்ள, மாவட்ட தேர்தல் ஆணைய கிடங்கில் இருந்து எடுத்துவரப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள், ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள தேர்தல் பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டு பூட்டி 'சீல்' வைக்கப்பட்டது.

## பெயர், சின்னம் பொருத்தும் பணி

இந்த நிலையில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் வேட்பாளர் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணி நேற்று தொடங்கியது. வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் முகவர்கள் முன்னிலையில் பாதுகாப்பு அறையில் இருந்து எடுத்துவரப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணி ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் ஸ்ரீகாந்த் தலைமையில் ஈரோடு மாநகராட்சி கூட்ட அரங்கில் நடந்தது. 20 மண்டலங்கள் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலத்திலும் 5 பணியாளர்கள் பணியாற்றினர். அப்போது இடைத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர், சின்னம் எந்திரங்களில் பொருத்தப்பட்டது.

## வாக்கு எண்ணிக்கை

மேலும் வாக்குப்பதிவு எந்திரங்களில் உள்ள அனைத்து பொத்தான்களும் சரியாக இயங்குகிறதா? என்பதையும் அலுவலர்கள் உறுதி செய்தனர். கட்டுப்பாட்டு எந்திரங்களில் எந்தவித மாற்றங்களும் செய்யக்கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டது. அனைத்து பணிகளும் முடிவடைந்த உடன் வாக்குப்பதிவு எந்திரங்கள் கட்டுப்பாட்டு எந்திரங்கள், வி.வி. பேடு ஆகியவை சீல் வைக்கப்பட்டு மீண்டும் ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள தேர்தல் பாதுகாப்பு அறைக்கு கொண்டு செல்லப்பட்டது. வாக்குப்பதிவு எந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணி இன்று (வியாழக்கிழமை) நிறைவுபெறும் என்று தேர்தல் அதிகாரிகள் தெரிவித்தனர்.

முன்னதாக பணிக்கு வந்தவர்களிடம் இருந்து செல்போன்கள் வாங்கப்பட்டு பத்திரமாக வைக்கப்பட்டது. சின்னம் பொருத்தும் பணி நடந்த இடத்துக்கு செல்போன்கள் அனுமதிக்கப்படவில்லை. இதற்கிடையில் 85 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் 246 பேர் தபால் வாக்குப்பதிவு செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. வருகிற 5-ந் தேதி வாக்குப்பதிவு முடிந்ததும் வாக்குப்பதிவு எந்திரங்கள், சித்தோடு அரசு என்ஜினியரிங் கல்லூரிக்கு எடுத்து செல்லப்பட்டு 8-ந் தேதி எண்ணப்படுகிறது.

Erode East Assembly Constituency By-election.
Fixing of symbols and Candidate's name in EVMs started.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 30 JAN 2025

### இடைத்தேர்தலை முன்னிட்டு

# பள்ளிக்கூடங்களில் உள்ள ஓவியங்களை அழிக்க உத்தரவு

ஈரோடு, ஜன.30–

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் வருகிற 5–ந் தேதி நடக்கிறது. இதை முன்னிட்டு வாக்குச்சாவடிகள் தயார் செய்யும் பணி ஓரிரு நாளில் தொடங்கப்பட உள்ளது. 237 வாக்குச்சாவடிகளிலும் நிழல்பந்தல் அமைக்கும் பணி, சாய்வு தளம் மற்றும் அனைத்து வசதிகளும் செய்யப்பட உள்ளன. இதற்காக வாக்குச்சாவடிகளாக இயங்க உள்ள பள்ளிக்கூடங்களில் தேர்தல் பிரிவு அதிகாரிகள் ஆய்வு செய்து வருகிறார்கள்.

வாக்குச்சாவடி மையங்களாக அரசு பள்ளிக்கூடங்கள், அரசு உதவி பெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், விளையாட்டு மைதானம் ஆகியவை உள்ளன. இதில் அங்கன்வாடிகள் மற்றும் அரசு பள்ளிக்கூடங்களில் அங்கு பணியாற்றும் ஆசிரிய–ஆசிரியைகள் தங்கள் சொந்த செலவில் பல்வேறு ஓவியங்களை வரைந்து வைத்துள்ளனர். குறிப்பாக குழந்தைகளின் மனதில் பதியும் வகையில் தமிழர்களின் ஐவகை நிலங்கள், தேசத்தலைவர்கள், புலவர்கள், விஞ்ஞானிகள் என ஓவியங்கள் உள்ளன.

இந்தநிலையில் தேர்தல் நடப்பதால் இந்த ஓவியங்களை அழிக்க வேண்டும் என அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளதாக தெரிகிறது. இது ஆசிரியர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

இதுகுறித்து ஆசிரியர் ஒருவர் கூறும்போது, 'ஒவ்வொரு முறை தேர்தலின் போதும் இதுபோன்ற பிரச்சினை உள்ளது. எனவே அரசியல் தலைவர்களின் ஓவியங்களை பெரும்பாலும் பள்ளிக்கூட வளாகம் மற்றும் வகுப்பறைகளில் வைப்பதில்லை. தேசிய மலர் தாமரை, தமிழ்நாட்டின் மாநில பழம் மாங்கனி என பாடத்தில் உள்ள விவரங்கள் கூட வகுப்பறையில் வைக்க முடியாத நிலை உள்ளது. எனவே அரசியல் சாராத புலவர்கள், தலைவர்களின் படங்கள், பூ, பழங்கள், விலங்குகள் படங்களை வைக்கிறோம். தற்போது ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலுக்காக இந்த படங்களையும் அழிக்க வேண்டும் என்று அதிகாரிகள் அறிவுறுத்தி உள்ளனர். திருவள்ளுவர், பாரதியார் படங்களை கூட மறைக்கச்சொல்கிறார்கள்' என்றார்.

Election officials ordered to veil the drawings in the schools where the polling booth is located.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 30 JAN 2025

தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறியதாக

# சீமான் மீது மேலும் ஒரு வழக்கு

ஈரோடு, ஜன.30-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு வருகிற 5-ந்தேதி நடக்கிறது. இந்த தேர்தலில் நாம் தமிழர் கட்சி சார்பில் வேட்பாளர் சீதாலட்சுமி போட்டியிடுகிறார். இவரை ஆதரித்து கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், ஈரோடு கிழக்கு தொகுதியில் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார். மேலும் தெருமுனை பிரசாரம், பொதுக்கூட்டங்களில் பேசி வருகிறார். இதில், தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறியதாகவும், அனுமதி பெறாமல் பிரசாரம் செய்ததாகவும் சீமான் மீது ஏற்கனவே 4 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு உள்ளன.

இந்த நிலையில் நேற்று முன்தினம் ஈரோடு நெரிக்கல்மேடு பகுதியில், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமியை ஆதரித்து மாலை 5.30 மணி முதல் 6.30 மணி வரை பொதுக்கூட்டம் நடத்த கட்சியினர் அனுமதி பெற்றிருந்தனர். ஆனால் தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறி அனுமதிக்கப்பட்ட நேரத்தை தவிர்த்து மாலை 6.15 மணிக்கு பொதுக்கூட்டத்தை தொடங்கி இரவு 9.15 மணிக்கு முடித்தனர். இதனால் தேர்தல் பறக்கும்படை அதிகாரி நவீன் ஈரோடு கருங்கல்பாளையம் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில் தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறியதாக நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மற்றும் கட்சியினர் 10 பேர் மீது கருங்கல்பாளையம் போலீசார் மேலும் ஒரு வழக்கு பதிவு செய்துள்ளனர். இதுமட்டுமின்றி நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமி மீதும் 10-க்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

Violation of ECC.
One more case filed on Seeman.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 30 JAN 2025

ஈரோட்டில்

# சீமான் பிரசார மேடை அமைக்க போலீசார் எதிர்ப்பு


## நாம் தமிழர் கட்சியினர் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு

ஈரோடு, ஜன.30-

ஈரோட்டில் சீமான் பிரசார மேடை அமைக்க போலீசார் எதிர்ப்பு தெரிவித்தனர். போலீசாரிடம் நாம் தமிழர் கட்சியினர் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

### சீமான் பிரசாரம்

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் நேற்று ஈரோடு குமலன்குட்டை பகுதியில் தேர்தல் பிரசாரம் செய்வதற்காக வேட்பாளர் சீதாலட்சுமி ஏற்கனவே அனுமதி கேட்டு விண்ணப்பித்து இருந்தார். தேர்தல் ஆணையம் சார்பில் அனுமதி வழங்கப்பட்டு இருந்தது.



நாம் தமிழர் கட்சியினர் போலீசாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டபோது எடுத்த படம்.

நாம் தமிழர் கட்சியினர் அங்குள்ள அரசு மேல்நிலை பள்ளிக்கூடம் முன்பு மேடை அமைப்பதற்காக வேன் ஒன்றை கொண்டு வந்து நிறுத்தினர். மேலும் ஒலிபெருக்கிகள், மின்விளக்குகள் அமைக்கும் பணியில் கட்சியினர் ஈடுபட்டு வந்தனர்.

### போலீசார் எதிர்ப்பு

இந்தநிலையில் வீரப்பன்சத்திரம் போலீஸ் இன்ஸ்பெக்டர் செந்தில் பிரபு தலைமையிலான போலீசார் அங்கு சென்றனர். அப்போது பள்ளிக்கூடம் முன்பு மேடை அமைக்க போலீசார் எதிர்ப்பு தெரிவித்தனர். மேலும் பள்ளியில் மாணவ-மாணவிகள் இருந்ததால், வேறு இடத்தில் அமைத்து கொள்ள கட்சியினரிடம் அறிவுறுத்தினர்.

இதனால் நாம் தமிழர் கட்சியினருக்கும், போலீசாருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதைத்தொடர்ந்து அங்கு போலீசார் குவிக்கப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. பள்ளிக்கூடத்தில் இருந்து மாலையில் மாணவ-மாணவிகள் வெளியேறினர். அதன்பிறகு அதே பகுதியில் மேடை அமைக்க போலீசார் அனுமதி வழங்கினர். இதையடுத்து அங்கு பிரசார மேடை அமைக்கப்பட்டது.

Police opposed to set up campaigning stage in Erode for Seeman.

Stir created while NTK party members argued.

Scanned with OKEN Scanner

30 JAN 2025

தினத்தந்தி




சரக்கு வாகனத்தின் கண்ணாடி உடைக்கப்பட்டுள்ளதை படத்தில் காணலாம்.

### போக்குவரத்து நெரிசலில் வழிவிடாததால்

# சரக்கு வாகனத்தின் கண்ணாடியை உடைத்த நாம் தமிழர் கட்சியினர்

## இடைத்தேர்தல் பிரசாரத்தில் பரபரப்பு

ஈரோடு, ஜன.30-

ஈரோட்டில் போக்குவரத்து நெரிசல் காரணமாக சரக்கு வாகனத்தின் கண்ணாடியை நாம் தமிழர் கட்சியினர் உடைத்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

### இடைத்தேர்தல் பிரசாரம்

ஈரோடு பெரிய் வலசு பகுதியில் பிரசாரம் செய்ய நேற்று மதியம் 12 மணி அளவில் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமி சத்தி ரோட்டில் உள்ள தேர்தல் பணிமனையில் இருந்து வாகனத்தில் பிரசாரத்துக்கு புறப்பட்டு சென்றார். கட்சி நிர்வாகிகள், ஆதரவாளர்கள், பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் பிரசாரத்துக்கு வந்துள்ள கட்சியினரும் கார், வேன்களில் பின்தொடர்ந்து சென்றனர்.

மேட்டூர் ரோட்டில் சென்றபோது போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டிருந்தது. அப்போது வேட்பாளரின் கார் ஒரு சரக்கு வாகனத்தை முந்தி சென்றது. அதை பின்தொடர்ந்து செல்ல பின்னால் வந்த வேன் டிரைவர் முயற்சி செய்தார். ஆனால் முந்தி செல்ல முடியவில்லை. எனவே பின்னால் ஒலி எழுப்பிக்கொண்டே வந்தார்.

இதனால் அரசு ஆஸ்பத்திரி ரவுண்டானா பகுதியில் சென்றதும் சரக்கு வாகனத்தின் டிரைவர் வண்டியை ஓரமாக நிறுத்தினார். அப்போது பின்னால் நாம் தமிழர் கட்சியினர் வந்த வேன், அவரை மடக்குவது போல வந்து முன்னால் நிறுத்தப்பட்டது. வேனைவிட்டு இறங்கியவர்கள் வேகமாக வந்து சரக்கு வாகனத்தின் முன்பக்க கண்ணாடியை ஓங்கி குத்தி வாகன டிரைவர் வண்டியை அங்கேயே நிறுத்தி விட்டு இறங்கினார். அப்போது வேன் பெருந்துறை ரோடு பகுதியில் போக்குவரத்து நெரிசலில் சிக்கி நின்று கொண்டிருந்தது. அதைப் பார்த்த டிரைவர் ஓடிச் சென்று வேனின் கண்ணாடியை தட்டி நியாயம் கேட்டார். உடனடியாக வேனில் இருந்து டிரைவர் உள்பட கட்சியினர் இறங்கி அவரை தாக்க வந்ததாக கூறப்படுகிறது.

அப்போது அங்கு பணியில் இருந்த போக்குவரத்து போலீசார் விரைந்து சென்று சரக்கு வாகன டிரைவரை மீட்டனர். போலீசார் வந்ததும் நாம் தமிழர் கட்சியினர் வேனில் ஏறி சென்றுவிட்டனர். இதுகுறித்து சரக்கு வாகன டிரைவரான ஈரோட்டை சேர்ந்த நாகராஜ் (வயது 63) அரசு ஆஸ்பத்திரி போலீஸ் நிலையத்தில் புகார் செய்தார்.

அதன்பேரில் ஈரோடு டவுன் போலீஸ் துணை சூப்பிரண்டு முத்துக்குமரன், இன்ஸ்பெக்டர் அனுராதா, சப்-இன்ஸ்பெக்டர் பழனிசாமி ஆகியோர் விசாரணை நடத்தினர்.

இந்த நிலையில் இது தொடர்பாக ஈரோடு அரசு ஆஸ்பத்திரி போலீசார் வழக்குப்பதிவு செய்து, சரக்கு வாகனத்தின் கண்ணாடியை உடைத்ததாக நாம் தமிழர் கட்சியை சேர்ந்த தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டத்தில் வசிக்கும் ஆதிநாராயணன் (45), அரியலூர் மாவட்டம் சுண்டக்குடியை சேர்ந்த

Traffic jam, NTK party members broke the front glass of a truck.
Commotion created in by-election campaigning.

Scanned with OKEN Scanner

தினமலர் 30 JAN 2025

## ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்

# ஓட்டுப்பதிவு மிஷினில் வேட்பாளர் பெயர், சின்னங்கள் பொருத்தும் பணி துவக்கம்

ஈரோடு, ஜன.30-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தல் பிப்ரவரி 5ம் தேதி நடைபெறுகிறது. இதைத் தொடர்ந்து 8ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது. இதில், தி.மு.க, நாம் தமிழர் கட்சி உள்ளிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் மற்றும் சுயேட்சை வேட்பாளர்கள் என மொத்தம் 46 பேர் போட்டியிடுகின்றனர். அவர்களது பெயர் பட்டியல் மற்றும் சின்னங்கள் கடந்த 20ம் தேதி ஒதுக்கீடு செய்து இறுதி செய்யப்பட்டன. அதனைத் தொடர்ந்து, ஓட்டுப் பதிவு மிஷின்களில் வேட்பாளர்கள் பெயர், சின்னம் கொண்ட பேலட் ஷீட் அச்சிடும் பணிகளை தேர்தல் அலுவலர்கள் சென்னைக்கு நேரடியாக சென்று மேற்கொண்டனர்.



ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு ஓட்டுப்பதிவு மிஷினில் வேட்பாளர் பெயர், சின்னங்கள் பொருத்தும் பணி துவங்கியது.

இந்த நிலையில், அந்த பேலட் ஷீட்களை ஓட்டுப்பதிவு மிஷின்களில் பொருத்தும் பணி நேற்று காலை 9.30 மணியளவில், ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் தொடங்கியது. இதற்காக மாநகராட்சி அலுவலகத்தில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. மாநகராட்சி அலுவலகத்திற்குள் வேட்பாளர் முகவர்கள் செல்போன் கொண்டு செல்ல அனுமதி மறுக்கப்பட்டது. இதேபோல் ஓட்டுப்பதிவு மிஷின்களில் வாக்காளர்கள், பெயர் சின்னம் பொருத்தும் பணியில் ஈடுபடும் அலுவலர்களும் உள்ளே செல்போன் கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டிருந்தது. வேட்பாளர் முகவர்கள் கடும் சோதனைக்கு பிறகே உள்ள அனுமதிக்கப்பட்டனர். அவர்களது உடைமைகள் மெட்டல் டிடெக்டர் கருவிகள் கொண்டு சோதனை செய்யப்பட்டது. ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் ஸ்ரீகாந்த் முன்னிலையில் பணிகள் தொடங்கியது. இதையடுத்து, ஓட்டுப்பதிவு மிஷின்களில் பேலட் ஷீட்களை பொருத்தும் பணியை அலுவலர்கள் மேற்கொண்டனர்.

ஈரோடு கிழக்குத் தொகுதியில் 237 வாக்குச் சாவடிகள் உள்ளன. இதில் வாக்குப் பதிவுக்காக கூடுதலாக 20 சதவீதம் ஓட்டுப்பதிவு மிஷின்களையும் சேர்த்து 284 ஓட்டுப்பதிவு மிஷின்கள் பயன்படுத்தப்படுகிறது. ஒரு ஓட்டுப்பதிவு மிஷினில் 16 வேட்பாளர்களின் பெயர்கள் மட்டுமே பொருத்த முடியும். கூடுதலாக கடைசியில் நோட்டாவுக்கான பட்டன் இருக்குமாறு வடிவைக்கப்பட்டுள்ளது.

இந்த இடைத்தேர்தலில் 46 வேட்பாளர்கள் மற்றும் நோட்டாவுடன் சேர்த்து 47 பட்டன்கள் தேவை உள்ளதால் ஒவ்வொரு வாக்குச்சாவடிகளுக்கும் 3 மிஷின்கள் பயன்படுத்தபடவுள்ளன. அதன்படி, இந்தத் தேர்தலில் 237 வாக்குச் சாவடிக ளிலும், 20 சதவீதம் கூடுதல் ஓட்டுப்பதிவு மிஷின்களையும் சேர்த்து மொத்தம் 852 ஓட்டுப்பதிவு மிஷின்கள், 284 கட்டுப்பாட்டு மிஷின்கள், 308 விவி பேட் மிஷின்கள் பயன்படுத்தப்படவுள்ளன. இதில், 852 ஓட்டுப்பதிவு மிஷின்களில் வேட்பாளரின் பெயர், சின்னம் அச்சிடப்பட்டுள்ள பேலட் ஷீட்கள் பொருத்தப்படுகிறது.

நேற்று தொடங்கிய இந்தப் பணி இன்னும் 2 அல்லது 3 நாட்களில் நிறைவடையும் என அதிகாரிகள் தெரிவித்தனர். முன்னதாக ஈரோடு மாநகராட்சி பாதுகாப்பு அறையில் இருந்த எலக்ட்ரானிக் ஓட்டுப்பதிவு மிஷின்கள் தேர்தல் நடத்தும் அலுவலர் ஸ்ரீகாந்த் முன்னிலையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர் முன்னிலையில் திறக்கப்பட்டு மாநகராட்சி கூட்டரங்கிற்கு கொண்டு செல்லப்பட்டது.

Erode East Assembly Constituency By-election.
Fixing of symbols and Candidate's name in EVMs started.

Scanned with OKEN Scanner

தினமலர் 30 JAN 2025

# தேர்தல் விதிமுறை மீறல்: சீமான் உட்பட 5 பேர் மீது வழக்குப்பதிவு

ஈரோடு, ஜன.30-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலில் போட்டியிடும் நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர் சீதாலட்சுமியை ஆதரித்து அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் ஈரோடு கிழக்கு தொகுதியில் முகாமிட்டு தொடர் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

பின்னர் தெருமுனைப் பிரச்சாரம், பொதுக்கூட்டங்களில் பேசி வ்ருகிறார். இதில், தேர்தல் விதிகளை மீறியும், அனுமதி பெறாமல் பிரச்சாரம் செய்ததாக ஏற்கனவே வேட்பாளர் சீதாலட்சுமி மற்றும் சீமான் கட்சியினர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் சீமான் மீது ஏற்கனவே 4 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தநிலையில், ஈரோடு நெரிக்கல் மேட்டில் நேற்று முன்தினம் மாலை நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமியை ஆதரித்து மாலை 5.30 மணி முதல் 6.30 மணி வரை பொதுக்கூட்டம் நடத்திட நாம் தமிழர் கட்சியினர் அனுமதி பெற்றிருந்தனர்.

ஆனால், தேர்தல் விதிகளை மீறி அனுமதிக்கப்பட்ட நேரத்தை தவிர்த்து மாலை 6.15 மணிக்கு பொதுக்கூட்டத்தை தொடங்கி இரவு 9.15 மணிக்கு முடித்தனர். இதுகுறித்து தேர்தல் பறக்கும்படை அதிகாரி நவீன், கருங்கல்பாளையம் போலீசில் அளித்த புகாரின்பேரில் தேர்தல் விதிகளை மீறியதாக நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் உட்பட 5 பேர் மீது போலீசார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

Case filed on 5 persons including Seeman in Erode for violation of ECC.

Scanned with OKEN Scanner

**தினகரன்** 30 JAN 2025

### அனைத்து வாக்குச்சாவடி மையங்களில்

# நாளை முதல் சிசிடிவி கேமரா பொருத்தும் பணி தொடக்கம்

ஈரோடு, ஜன. 30: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலை முன்னிட்டு, 237 வாக்குச்சாவடி மையங்களில், நாளை (31ம் தேதி) முதல் சிசிடிவி கேமரா பொருத்தும் பணி தொடங்க உள்ளதாக தேர்தல் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி பிப்ரவரி 5ம் தேதி வாக்குப்பதிவு நடைபெறுகிறது. 8ம் தேதி வாக்கு எண்ணப்பட்டு, அன்றைய தினமே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. இத்தேர்தலையொட்டி, முன்னேற்பாடு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், கிழக்கு தொகுதிக்குட்பட்ட 237 வாக்குச்சாவடி மையங்களிலும், சிசிடிவி கேமரா மற்றும் மின் விளக்கு பொருத்தும் பணி நாளை (31ம் தேதி) முதல் தொடங்கப்பட உள்ளதாக தேர்தல் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது குறித்து தேர்தல் பிரிவு அதிகாரிகள் கூறியதாவது: தேர்தலையொட்டி, 237 வாக்குச்சாவடி மையங்களில் தூய்மைப்படுத்தல் மற்றும் அடிப்படை வசதிகள் செய்யும் பணி நடைபெற்று வந்தது. நாளை முதல் சிசிடிவி கேமரா பொருத்தும் பணி தொடங்கப்பட உள்ளது.

இப்பணிகள் பிப்ரவரி 2ம் தேதி வரை நடைபெறும். குறிப்பாக, பதற்றமான வாக்குச்சாவடி மையங்களில் கூடுதலாக சிசிடிவி கேமராக்கள் பொருத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், மின் விளக்குகள் பற்றாக்குறை இருக்கும் மையங்கள் கண்காணிக்கப்பட்டு, அங்கு புதிய விளக்குகள் பொருத்தும் பணியும் நாளை தொடங்கப்பட உள்ளது. இதற்காக, 65 புதிய மின் விளக்குகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

Fixing of CCTV cameras in all polling booths starts tomorrow.

Scanned with OKEN Scanner

தினகரன் 30 JAN 2025

### ஈரோடு இடைத்தேர்தல் வாக்குப்பதிவு அன்று

# சட்டம் ஒழுங்கு பிரச்னையை தடுக்க போலீஸ் அதிவிரைவு குழு அமைப்பு

ஈரோடு, ஜன. 30: ஈரோடு இடைத்தேர்தல் வாக்குப்பதிவு அன்று சட்டம் ஒழுங்கு பிரச்சனையை தடுக்க போலீஸ் அதிவிரைவுக்குழு அமைக்கப்பட உள்ளதாக அதிகாரிகள் தகவல் தெரிவித்தனர்.

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு வரும் பிப்ரவரி 5ம் தேதி நடைபெற உள்ளது. இதற்காக 53 இடங்களில் 237 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது. இதில், 9 வாக்குச்சாவடிகள் பதற்றமானவையாக அறிவிக்கப்பட்டு, அங்கு கூடுதல் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில், தேர்தல் வாக்குப்பதிவு தினத்தன்று சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படாமல் தடுக்க போலீசார் அதிவிரைவு நடவடிக்கை குழு அமைக்கப்பட உள்ளது.

இதுகுறித்து மாவட்ட போலீஸ் அதிகாரிகள் கூறியதாவது: ஈரோடு இடைத்தேர்தல் நடக்கும் 237 வாக்குச்சாவடிகளிலும் ஒரு துணை ராணுவ வீரர்கள் துப்பாக்கி ஏந்திய நிலையில் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவர். பதற்றமான வாக்குச்சாவடியில் ஒரு இன்ஸ்பெக்டர் தலைமையில் கூடுதல் பாதுகாப்பு போடப்பட உள்ளது.

வாக்குச்சாவடி எல்லையான 100 மீட்டரில் ஒரு எஸ்ஐ தலைமையில் போலீசாரும், 200 மீட்டர் தூரத்தில் ஒரு எஸ்ஐ தலைமையிலும் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவர். இதுதவிர தேர்தலன்று சட்டம் ஒழுங்கு பிரச்சனையை தடுக்க அதிவிரைவு நடவடிக்கை குழு அமைக்கப்பட உள்ளது.

இக்குழுவினர் ஏதாவது பிரச்னை ஏற்பட்டால் அங்கு உடனடியாக விரைந்து சென்று, பிரச்னைக்கு காரணமான நபர்கள் மீது நடவடிக்கை எடுப்பார்கள். மேலும், ஏடிஎஸ்பி.க்கள் தலைமையிலான அதிவிரைவுப்படை போலீசாரும், டிஎஸ்பி:க்கள் தலைமையிலான இன்ஸ்பெக்டர்கள் அடங்கிய போலீசார் குழுவினரும் தொகுதிக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் வாகன ரோந்து பணியில் ஈடுபடுவர். தற்போது, வாக்குச்சாவடியில் பணியாற்ற போலீசார், அதிவிரைவு நடவடிக்கை குழு போலீசார் ஒதுக்குவது குறித்து ஆலோசனை நடந்து வருகிறது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

'Rapid Police Force' formed to prevent law and order problems on Erode by-election polling day.

Scanned with OKEN Scanner

தினகரன் 30 JAN 2025

# வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர் பெயர், சின்னம் பொருத்தும் பணி தொடங்கியது

ஈரோடு, ஜன. 30: ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தல் வரும் பிப்ரவரி 5ம் தேதி நடைபெறவுள்ளது.

இதில், திமுக, நாதக உள்ளிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் மற்றும் சுயேட்சை வேட்பாளர்கள் என மொத்தம் 46 பேர் போட்டியிடுகின்றனர். அவர்களது பெயர் பட்டியல் மற்றும் சின்னங்கள் கடந்த 20ம் தேதி ஒதுக்கீடு செய்து இறுதி செய்யப்பட்டன. அதனைத் தொடர்ந்து, வாக்குப் பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்கள் பெயர், சின்னம் ஆகியவை அச்சிடப்பட்ட பேலட் ஷீட் அச்சிடப்படும் பணிகளை தேர்தல் அலுவலர்கள் சென்னைக்கு நேரடியாக சென்று மேற்கொண்டனர்.

இந்நிலையில், பேலட் ஷீட்கள் அச்சிடப்பட்டு,



ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலையொட்டி நேற்று மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் சின்னங்கள் பொருத்தும் பணி மாநகராட்சி அலுவலகத்தில் நடந்தது.

அவற்றை வாக்குப்பதிவு இயந்திரங்களில் பொருத்தும் பணி நேற்று காலை 9 மணியளவில், ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் தொடங்கியது.

இப்பணி குறித்து, தேர்தல் நடத்தும் அலுவலர். ஸ்ரீகாந்த் முன்னிலையில், அலுவலர்களுக்கு செய்முறை விளக்கமளிக்கப்பட்டது. இதையடுத்து, வாக்குப் பதிவு இயந்திரங்களில் பேலட் ஷீட்களை பொருத்தும் பணியை அலுவலர்கள் மேற்கொண்டனர். இப்பணியில் 150 பேர் ஈடுபட்டுள்ளனர்.

ஈரோடு கிழக்குத் தொகுதியில் 237 வாக்குச் சாவடிகள் உள்ளன. இதில் வாக்குப் பதிவுக்காக கூடுதலாக 20% வாக்குப் பதிவு இயந்திரங்களையும் சேர்த்து 284 வாக்குப் பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படும்.

ஒரு வாக்குப் பதிவு இயந்திரத்தில் 16 வேட்பாளர்களின் பெயர்கள் மட்டுமே பொருத்த முடியும். கூடுதலாக கடைசியில் நோட்டாவுக்கான பட்டன் பொருத்தப்பட்டிருக்கும். அந்த அடிப்படையில், இந்த இடைத்தேர்தலில் 46 வேட்பாளர்கள் மற்றும் நோட்டாவுக்கு என 3 வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

அதன்படி, இந்தத் தேர்தலில் 237 வாக்குச்சாவடிகளிலும், 20% கூடுதல் வாக்குப்பதிவு இயந்திரங்களையும் சேர்த்து மொத்தம் 852 வாக்குப்பதிவு இயந்திரங்கள், 284 கட்டுப்பாட்டு இயந்திரங்கள், 308 விவி பேட் இயந்திரங்கள் பயன்படுத்தப்படவுள்ளன.

இதில், 852 வாக்குப் பதிவு இயந்திரங்களிலும் வேட்பாளரின் பெயர், சின்னம் அச்சிடப்பட்டுள்ள பேலட் ஷீட்கள் பொருத்தப்படுகிறது. நேற்று தொடங்கிய இந்தப் பணி இன்னும் 3 நாட்களில் முடிவடையும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

Erode East Assembly Constituency By-election.
Fixing of symbols and Candidate's name in EVMs started.

Scanned with OKEN Scanner

தினகரன் 30 JAN 2025

தேர்தல் பறக்கும் படையினர்

## பறிமுதல் செய்த ரூ.25.65 லட்சம் உரியவரிடம் ஒப்படைப்பு

ஈரோடு, ஜன. 30: ஈரோடு கிழக்குத் தொகுதியில் இடைத்தேர்தல் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்தன. அதன்படி, வாக்காளர்களுக்கு பரிசு பொருட்கள், பணம் உள்ளிட்டவைகளை கொடுப்பதை தடுக்கும் வகையில், பறக்கும் படை அலுவலர்கள் குழு மற்றும் கண்காணிப்பு நிலைக் குழுவினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். அதன்படி, உரிய ஆவணங்களின்றி ரூ.50 ஆயிரத்துக்கும் மேலாக எடுத்து செல்லப்படும் தொகைகள் பறிமுதல் செய்யப்பட்டு, தேர்தல் கட்டுப்பாடு பிரிவு மூலமாக மாவட்ட கருவூலத்தில் வைக்கப்பட்டுள்ளன.

தற்போது வரை தேர்தல் நடத்தை விதிமுறைகள் அறிவிக்கப்பட்ட 7ம் தேதி முதல் நேற்று காலை வரை உரிய ஆவணங்களின்றி எடுத்துவரப்பட்டதாக மொத்தம் 53 பேரிடமிருந்து ரூ.37 லட்சத்து 24 ஆயிரத்து 560 தேர்தல் பறக்கும்படையினர் பறிமுதல் செய்திருந்தனர். அதில், உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து 15 பேருக்கு சொந்தமான ரூ.25 லட்சத்து 65 ஆயிரத்து 60 அவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 38 நபர்களுக்குச் சொந்தமான ரூ. 11 லட்சத்து 59 ஆயிரத்து 500 மாவட்ட கருவூலத்தில் வைக்கப்பட்டுள்ளது.

The seized amount of Rs.25.65 Lakhs by the flying squad returned on the submission of proper documents.

Scanned with OKEN Scanner

தினகரன் 30 JAN 2025

# ஜவுளி வியாபாரி உட்பட 2 பேரிடம் ரூ.3.38 லட்சம் பறிமுதல்

ஈரோடு, ஜன. 30: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி, ஈரோடு பி.பெ.அக்ரஹாரம் பகுதியில் பறக்கும் படையினர் நேற்று வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.


அப்போது, அவ்வழியாக வந்த காரை தடுத்து நிறுத்தி சோதனை செய்தனர். காரில் ரூ.1 லட்சத்து 50 ஆயிரம் ரொக்கம் இருந்தது. காரை ஓட்டி வந்த நபரிடம் விசாரணை நடத்தியதில், அவர் கோவை மாவட்டம் துடியலூர் எஸ்.எம்.பாளையத்தை சேர்ந்த ஜவுளி வியாபாரி கவுதமன் என்பதும், அவர் எடுத்து வந்த பணத்துக்கு உரிய ஆவணம் இல்லை என்பதும் தெரியவந்தது. இதைத்தொடர்ந்து பணத்தை பறிமுதல் செய்தனர். இதேபோல், ஈரோடு அரசு மருத்துவமனை ரவுண்டானா பகுதியில் நேற்று மாலை பறக்கும் படையினர் மேற்கொண்ட வாகன தணிக்கையில், அவ்வழியாக வந்த காரை தடுத்து நிறுத்தி சோதனை செய்தனர்.

அந்த காரில் ரூ.1 லட்சத்து 88 ஆயிரம் ரொக்கம் இருந்தது. இதையடுத்து டிரைவரிடம் விசாரணை நடத்தியதில், கரூரை சேர்ந்த பாண்டி என்பதும், அவர் எடுத்து வந்த பணத்திற்கு உரிய ஆவணங்கள் இல்லாததால் பறிமுதல் செய்து, தேர்தல் கட்டுப்பாட்டு பிரிவு அலுவலரிடம் ஒப்படைத்தனர்.

Rs.3.38 Lakhs seized from 2 persons including a textile trader.

Scanned with OKEN Scanner

தினகரன்    30 JAN 2025



▸ ஈரோடு கிழக்கு தொகுதி வாக்குப்பதிவுக்கு ஒரு வாரம் உள்ள நிலையில் துணை ராணுவத்தினர், போலீசார் எல்லை மாரியம்மன் கோயில் அருகே தீவிர வாகன தணிக்கை பணியில் ஈடுபட்டனர்.

Vehicle checking at Ellai Mariyamman temple.

Scanned with OKEN Scanner

தினமணி 30 JAN 2025

ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல்

# வாக்குப் பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்கள் பெயர், சின்னம் பொருத்தும் பணி தொடக்கம்



வேட்பாளர்கள் பெயர், சின்னம் பொருத்தும் பணியில் ஈடுபட்ட அலுவலர்கள்.

ஈரோடு, ஜன. 29: ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் பயன்படுத்தப்படும் வாக்குப் பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்கள் பெயர், சின்னம் பொருத்தும் பணி புதன்கிழமை தொடங்கியது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் பிப்ரவரி 5-ஆம் தேதி நடைபெறவுள்ளது. இதில் திமுக, நாதக உள்ளிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் மற்றும் சுயேச்சை வேட்பாளர்கள் என மொத்தம் 46 பேர் போட்டியிடுகின்றனர். அவர்களது பெயர் பட்டியல் மற்றும் சின்னங்கள் கடந்த 20-ஆம் தேதி இறுதி செய்யப்பட்டன.

அதனைத் தொடர்ந்து வாக்குப் பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்கள் பெயர், சின்னம் ஆகிய விவரம் அடங்கிய தாள் அச்சிடப்படும் பணிகளை தேர்தல் அலுவலர்கள் சென்னைக்கு நேரடியாக சென்று மேற்கொண்டனர். இந்த நிலையில், அச்சிடப்பட்ட தாள்களை வாக்குப் பதிவு இயந்திரங்களில் பொருத்தும் பணி ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள கூட்டரங்கில் புதன்கிழமை தொடங்கியது.

தேர்தல் நடத்தும் அலுவலர் ஸ்ரீகாந்த் முன்னிலையில் அலுவலர்களுக்கு செய்முறை விளக்கமளிக்கப்பட்டது. இதையடுத்து வாக்குப் பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்கள் பெயர், சின்னம் பொருத்தும் பணியை அலுவலர்கள் மேற்கொண்டனர். இப்பணியில் 150 பேர் ஈடுபட்டுள்ளனர்.

ஈரோடு கிழக்கு தொகுதியில் 237 வாக்குச் சாவடிகள் உள்ளன. இதில் வாக்குப் பதிவுக்காக கூடுதலாக 20 சதவீதம் வாக்குப் பதிவு இயந்திரங்களையும் சேர்த்து 284 வாக்குப் பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படும்.

ஒரு வாக்குப் பதிவு இயந்திரத்தில் 16 வேட்பாளர்களின் பெயர்கள் மட்டுமே பொருத்த முடியும். கூடுதலாக கடைசியில் நோட்டாவுக்கான பட்டன் பொருத்தப்பட்டிருக்கும். 46 வேட்பாளர்கள், நோட்டாவுக்கு 1 என மொத்தம் 47 பெயர்கள் இடம்பெற வேண்டும் என்பதால் 3 வாக்குப் பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

அதன்படி, இந்தத் தேர்தலில் 237 வாக்குச் சாவடிகளிலும், 20 சதவீத கூடுதல் வாக்குப் பதிவு இயந்திரங்களையும் சேர்த்து மொத்தம் 852 வாக்குப் பதிவு இயந்திரங்கள், 284 கட்டுப்பாட்டு இயந்திரங்கள், 308 விவி பேட் இயந்திரங்கள் பயன்படுத்தப்படவுள்ளன. இதில் 852 வாக்குப் பதிவு இயந்திரங்களிலும் வேட்பாளரின் பெயர், சின்னம் அச்சிடப்பட்டுள்ள தாள் பொருத்தப்படுகிறது. புதன்கிழமை தொடங்கிய இந்தப் பணி 3 நாள்களில் முடிவடையும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

Erode East Assembly Constituency By-election.
Fixing of symbols and Candidate's name in EVMs started.

Scanned with OKEN Scanner

தினமணி 30 JAN 2025

## தேர்தல் விதிகளை மீறியதாக சீமான் உள்பட 10 பேர் மீது வழக்குப் பதிவு



ஈரோடு, ஜன.29: ஈரோட்டில் தேர்தல் விதிகளை மீறியதாக நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் உள்பட 10 பேர் மீது போலீஸார் புதன்கிழமை வழக்குப் பதிவு செய்தனர்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் பிப்ரவரி 5-ஆம் தேதி நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் போட்டியிடும் நாம் தமிழர் கட்சியின் வேட்பாளரை ஆதரித்து அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் ஈரோட்டில் தொடர் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

இதில் தேர்தல் விதிகளை மீறியும், அனுமதி பெறாமல் பிரசாரம் செய்ததாக ஏற்கெனவே வேட்பாளர் சீதாலட்சுமி மற்றும் சீமான், கட்சியினர் மீது 10-க்கும் மேற்பட்ட வழக்குகளை போலீஸார் பதிவு செய்துள்ளனர்.

இந்நிலையில், ஈரோடு நெரிக்கல்மேட்டில் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமியை ஆதரித்து செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணி முதல் 6.30 மணி வரை பொதுக்கூட்டம் நடத்திட அக்கட்சியினர் அனுமதி பெற்றிருந்தனர். ஆனால், தேர்தல் விதிகளை மீறி அனுமதிக்கப்பட்ட நேரத்தை தவிர்த்து மாலை 6.15 மணிக்கு பொதுக்கூட்டத்தை தொடங்கி இரவு 9.15 மணி வரை நடத்தியுள்ளனர். இதுகுறித்து தேர்தல் பறக்கும்படை அதிகாரி நவீன், ஈரோடு கருங்கல்பாளையம் காவல் நிலையத்தில் அளித்த புகாரின்பேரில் தேர்தல் விதிகளை மீறியதாக நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மற்றும் கட்சியினர் 10 பேர் மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

Case filed on 10 persons including Seeman for violation of ECC.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 30 JAN 2025

# 1.44 லட்சம் வாக்காளர்களுக்கு 'பூத் சிலிப்' வழங்கல்

**ஈரோடு, ஜன. 30–**

ஈரோடு கிழக்கு தொகுதியில் பிப்., 5ல் இடைத் தேர்தல் நடக்க உள்ளது. வாக்காளர்களுக்கு கடந்த, 26 முதல் 'பூத் சிலிப்' வழங்கும் பணி நடந்து வருகிறது.

கடந்த, 26ல் – 40,429 வாக்காளர்களுக்கும், 27 ல் – 34,859 வாக்காளர்களுக்கும், 28 ல் – 32,079 வாக்காளர்களுக்கும், நேற்று – 37,146 வாக்காளர்களுக்கும் பூத் சிலிப் வழங்கப்பட்டுள்ளது.

மொத்தமுள்ள, 2 லட்சத்து, 27 ஆயிரத்து, 546 வாக்காளர்களில் இதுவரை, 1 லட்சத்து, 44,513 வாக்காளர்களுக்கு பூத் சிலிப் வழங்கப்பட்டுவிட்டது. மீதமுள்ள, 83,033 வாக்காளர்களுக்கு இன்னும், 2 நாளில் பூத் சிலிப் வழங்கி முடிக்க திட்டமிட்டுள்ளனர்.

Booth slips will be distributed to 1.44 Lakhs voters.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 30 JAN 2025



■ ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில், பிப்.,5ல் ஓட்டுப்பதிவு நடக்க உள்ள நிலையில், நேற்று மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரங்களில் (இ.வி.எம்:,) 'பேலட் ஷீட்' ஓட்டும் பணி துவங்கியது.

மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரங்களில்

# 'பேலட் ஷீட்' ஓட்டும் பணி துவக்கம்

ஈரோடு, ஜன. 30–

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில், பிப்.,5ல் ஓட்டுப்பதிவு நடக்க உள்ள நிலையில், நேற்று மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரங்களில் (இ.வி.எம்.,) 'பேலட் ஷீட்' ஓட்டும் பணி துவங்கியது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில், 2 லட்சத்து, 27,546 வாக்காளர்கள் வரும் பிப்., 5ல் ஓட்டுப்பதிவு செய்ய உள்ளனர். இத்தொகுதியில், 46 வேட்பாளர்கள் போட்டியிடுவதால், ஒவ்வொரு ஓட்டுச்சாவடியிலும் தலா, 3 இ.வி.எம்.,கள் பயன்படுத்தப்படுகிறது.

இதன்படி மொத்தமுள்ள, 237 ஓட்டுச்சாவடிகள் மற்றும் கூடுதலாக, 20 சதவீதம் சேர்த்து, 852 இ.வி.எம்.,கள், 284 கட்டுப்பாட்டு இயந்திரம், 308 வி.வி.பேட் ஆகியவை தயார் நிலையில், ஈரோடு மாநகராட்சி அலுவலக பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டுள்ளன.

கடந்த, 20ல் இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்ட நிலையில், 24ல் 'பேலட் ஷீட்' அச்சிடப்பட்டு, அவையும் பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டது. நேற்று காலை, தேர்தல் நடத்தும் அலுவலர் ஸ்ரீகாந்த் தலைமையில், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள், வேட்பாளர்கள், அவர்களது முகவர்கள் முன்னிலையில், அந்த அறை திறக்கப்பட்டு, இ.வி.எம்.,கள், 'பேலட் ஷீட்' ஆகியவை எடுக்கப்பட்டன.

மாநகராட்சி கூட்டம் நடக்கும் அறையில், இ.வி.எம்.,களில் 'பேலட் ஷீட்'கள் ஓட்டும் பணி துவங்கியது. வேட்பாளர் பெயர் – சின்னம் ஆகியவை கொண்ட 'பேலட் ஷீட்' ஒட்டப்பட்டன.

இத்தொகுதியில் உள்ள, 237 ஓட்டுச்சாவடிகள், 20 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலத்துக்கும் தலா, 5 அலுவலர்கள், பணியாளர்கள் மூலம் ஓட்டும் பணி நடந்தது. அத்துடன், இயந்திரத்தின் பொத்தான் இயங்குகிறதா என்பதையும் சோதித்து உறுதி செய்து கொண்டனர். ஓட்டும் பணி முடிந்த இயந்திரங்கள், கட்டுப்பாட்டு இயந்திரம், வி.வி.பேட் ஆகியவை பெட்டிகளில் வைத்து சீலிட்டு, மீண்டும் பாதுகாப்பு அறைக்கு கொண்டு சென்றனர். 'சீல்' வைக்கும் பணிக்கு, போஸ்ட் ஆபீஸில் இருந்த, 10க்கும் மேற்பட்ட பணியாளர்களை பயன்படுத்துகின்றனர். இப்பணி இன்று மாலைக்குள் நிறைவடையும் என, அதிகாரிகள் தெரிவித்தனர். இத்தேர்தலில், 85 வயதுக்கு மேற்பட்ட முதியோர், மாற்றுத்திறனாளிகள் என, 246 பேர் தபால் ஓட்டாக தங்கள் ஓட்டை பதிவு செய்துள்ளனர். மற்றவர்கள் வரும் பிப்., 5ல் ஓட்டுப்பதிவு செய்து, வரும், பிப்., 8ல் ஓட்டு எண்ணிக்கை சித்தோடு அரசு பொறியியல் கல்லூரியில் நடக்க உள்ளது.

Fixing of Ballot sheets in EVMs started.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர்

# பறக்கும் படையால் பறிமுதல் செய்த ரூ.25.65 லட்சம் திரும்ப ஒப்படைப்பு

**ஈரோடு, ஜன. 30-**

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்காக, அமைக்கப்பட்ட பறக்கும் படையினர் பறிமுதல் செய்த பணத்தில், 25.65 லட்சம் ரூபாயை உரிய ஆவணங்கள் அடிப்படையில் திரும்ப வழங்கினர்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்காக கடந்த, 7 முதல் பறக்கும் படையினர், நிலை கண்காணிப்பு குழு அதிகாரிகள் வாகன தணிக்கை செய்து, ஆவணங்கள் இல்லாமல் கொண்டு வரப்படும் பணம், பொருட்களை பறிமுதல் செய்து வருகின்றனர். கடந்த, 7 முதல் இதுவரை, 37 லட்சத்து, 24,560 ரூபாயை பறிமுதல் செய்து கருவூலத்தில் செலுத்தி இருந்தனர். உரிய ஆவணங்களை சமர்பித்ததன் அடிப்படையில், 25 லட்சத்து, 65,060 ரூபாயை உரியவர்களிடம் திரும்ப ஒப்படைத்தனர். மீதமுள்ள, 11 லட்சத்து, 59,500 ரூபாய் கருவூலத்தில் இருப்பு வைத்துள்ளனர்.

**ரூ.1.50 லட்சம் பறிமுதல்**

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்கான பறக்கும் படையினர், வீரகவுண்டன் தலைமையில் பி.பி. அக்ரஹாரம் பகுதியில் வாகன தணிக்கையில் ஈடுபட்டனர். அப்போது கோவை, துடியலுார் எஸ்.எம்.பாளையத்தை சேர்ந்த கவுதமன் என்பவர், ஜவுளி வியாபாரம் தொடர்பாக, 1.50 லட்சம் ரூபாயை தனது ஹோட்டா கன்சர்ன் காரில் எடுத்து வந்தார். அவரது வாகனத்தை தணிக்கை செய்தபோது ஆவணங்கள் இன்றி கொண்டு வரப்பட்ட, 1.50 லட்சம் ரூபாயை பறிமுதல் செய்து, கருவூலத்தில் செலுத்தினர்.

The seized amount of Rs.25.65 Lakhs by the flying squad returned on the submission of proper documents.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர்　30 JAN 2025

# கூடுதல் நேரம் பிரசாரம் செய்ததாக சீமான் உள்ளிட்ட 10 பேர் மீது வழக்கு

ஈரோடு, ஜன. 30-

அனுமதிக்கப்பட்ட நேரத்தை விட, கூடுதல் நேரம் தேர்தல் பிரசாரம் செய்ததாக, நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் உள்ளிட்ட, 10 பேர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

ஈரோடு, பவானி சாலை நெரிகல் மேட்டில் நேற்று முன்தினம், ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில், நாம் தமிழர் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் சீதாலட்சுமியை ஆதரித்து, ஒருங்கிணைப்பாளர் சீமான் பொது கூட்டத்தில் பேசினார். இந்நிலையில் மாலை, 5:30 முதல் 6:30 மணி வரை பிரசாரத்துக்கு அனுமதி கேட்டு இருந்தனர். ஆனால், 6:15 முதல் இரவு, 9:15 மணி வரை பிரசாரம் செய்தனர். இதையடுத்து, தேர்தல் நடத்தை விதிமுறையை மீறியதாக தேர்தல் பறக்கும் படையினர், ஈரோடு கருங்கல்பாளையம் போலீசில் புகார் அளித்தனர்.

இதன்படி, சீமான் உள்ளிட்ட அக்கட்சியினர், 10 பேர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

Case filed on 10 persons including Seeman for violation of ECC.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 30 JAN 2025

# பிரசாரத்துக்கு அனுமதி மறுப்பு நா.த.க.,வினர் வாக்குவாதம்

ஈரோடு, ஜன. 30–

ஈரோட்டில், தெருமுனை கூட்டத்துக்கு இடம் கொடுப்பது தொடர்பாக, இன்ஸ்பெக்டருடன் நாம் தமிழர் கட்சியினர் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலில், நா.த.க.,வேட்பாளர் சீதா லட்சுமி, நேற்று ஈரோடு குமலன் குட்டை பகுதியில் தெருமுனை பிரசாரம் மேற்கொள்ள அனுமதி கேட்டு இருந்தார். தேர்தல் கமிஷனில் அனுமதியும் வழங்கப்பட்டு இருந்தது. அங்குள்ள அரசு மேல்நிலைப்பள்ளி முன்புறம், வேன் பிரசாரம் செய்ய மைக் செட்கள், விளக்குகளை அமைக்க துவங்கினர். பள்ளிக்கு முன் வேன் பிரசாரம் செய்ய எதிர்ப்பு கிளம்பியது. தெருமுனை கூட்டத்துக்கு அனுமதி கேட்ட நிலையில் வேன் பிரசாரம் செய்ய கூடாது. வேறு இடத்துக்கு கூட்டத்தை மாற்றி கொள்ள வேண்டும் என்று வீரப்பன் சத்திரம் போலீஸ் இன்ஸ்பெக்டர் செந்தில் பிரபு தெரிவித்தார். இதனால் நாம் தமிழர் கட்சியினருக்கும், போலீசாருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்நிலையில் பள்ளி நேரம் முடிந்து மாணவ, மாணவியர் வெளியேறினர். இதனால் சிறிது நேரத்துக்கு பின், பள்ளி முன்புறம் வேன் பிரசாரம் செய்ய இன்ஸ்பெக்டர் அனுமதித்தார். இதையடுத்து, நா.த.க.,வினர் பிரசார பணிகளை தொடர்ந்தனர்.

Permission declined for campaigning.
NTK party members argued.

Scanned with OKEN Scanner

மாலை மலர் 2 9 JAN 2025

இடைத்தேர்தல் நடத்தை விதிமுறை அமல்

# 20-க்கும் மேற்பட்ட வாகனங்களில் கட்சி கொடி அகற்றம்

ஈரோடு, ஜன. 29–

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு வருகின்ற பிப்ரவரி 5–ந் தேதி நடக்கிறது. 8–ந் தேதி வாக்குகள் எண்ணப்பட்டு, முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளது. இத்தேர்தலையொட்டி கிழக்கு தொகுதிக்குப்பட்ட பகுதிகளில் தேர்தல் நடத்தை விதிமுறை அமலில் உள்ளது. இதனையடுத்து தேர்தல் பறக்கும் படை, நிலை கண்காணிப்பு குழுவினர் தீவிர வாகனச் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் துணை ராணுவத்தினர் மற்றும் போலீசாரும் பலத்த பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் சேலம், நாமக்கல் மாவட்டங்களில் இருந்து பள்ளிப்பாளையம் வழியாக ஈரோட்டுக்கு வந்த 20–க்கும் மேற்பட்ட வாகனங்களில் அரசியல் கட்சி கொடிகள் பொருத்தப்பட்டிருந்தது.

இதனையடுத்து கருங்கல்பாளையம் சோதனைச் சாவடியில் இருந்த போலீசார், அந்த கார்களை நிறுத்தி, அரசியல் கட்சி கொடியை அகற்றினர்.

Political party flag removed from 20 vehicles since by-election ECC is under force.

Scanned with OKEN Scanner